(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 164-வது விதியின் கீழ் 1979—80-ம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 173-வது விதியின் கீழ் 1979—80-ம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 182-ஏ விதியின் கீழ், 1979—80-ம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS